1970 ஜனவரி 24]

தால் அதைத் தடுப்பதற்கு நிச்சயமாகக் கவனிக்கப்படும். தி.மு.க. ஆட்சியில் திருவிழாவில் ஒலிபெருக்கிக்கும் தடையா? என்றெல்லாம் சொல்லாமல் இருந்தால் போதும்.

Fire accidents in Thanjavur district

*69 *Q*.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons taken into custody in connection with the mysterious fire accidents that have taken place in Kumbakonam, Thanjavur, Mayuram and other surrounding areas of Thanjavur district in the course of the third week of July 1968 and in the first half of August 1968;

(b) whether some chemicals are being used by the miscreants to create fire in the above said places; and

(*c*) whether the Government have appointed any special police official to help the investigation by the local police?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 451 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ) இல்லை.

(உ) இல்லை.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister whether these fire accidents were intentional or accidental?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விபத்துக்கள் எல்லாம் விபத்துக்கள்.

ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகள்

*70 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹையர் கிரேடு ஆசிரியர்களின் பதவிகளை செகண்டரி கிரேடாக மாற்றும் உத்தேசம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்படி எத்தனை ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாவார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) உயர் துவக்கத்தரப் பதவிகளில் (High Grade Posts) பணிபுரிந்து வரும் இடைநிலைத் தர ஆசிரியர்கள் (Secondary Grade Posts) அனைவரும் இடைநிலைத் தரப் பதவிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

[1970 ஜனவரி 24

திரு. வை. சுவாமிநாதன் : இப்போது இந்த ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை எடுத்து விடும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஹையர் கிரேட் பதவிகளில் பணி புரிந்து வரும் செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குப் படிப்படியாக செகன்டரி கிரேட் ஊதியம் தருவது என்ற முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. இனி ஹையர் கிரேட் போஸ்ட் வைப்பதில்லை. அது மெல்ல, மெல்ல மாற்றப்பட்டு வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : செகன்டரி கிரேட் பாஸ் செய்துவிட்டு இடம் இல்லாத காரணத்தினால் ஹையர் கிரேட் போஸ்டில் ஆசிரியர்கள் பலர் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் மிகவும் மன வேதனையோடு அதில் வேலை செய்யவேண்டியிருப்பதால் இடம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளமாவது கொடுக்க உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சிதான் 1967-68-ல் எடுக்கப்பட்டது. அப்போது 14,000 செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் பதவிகளில் வேலை புரிந்து வந்தார்கள். இதுவரையில் படிப்படியாகக் கொடுக்கப்பட்ட வகையில் 11,000 ஆசிரியர்கள் செகன்டரி கிரேடு ஊதியம் பெறுகிறார்கள். 1970–71-ல் 2,000-த்திலிருந்து 3,000 ஆசிரியர்கள் வரையில் எடுத்துக்கொள்ளப்படுகிற நிலைமையிருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பதவிகளை எந்த எந்த அடிப்படையில் செகன்டரி கிரேடாக மாற்ற அரசு கருதியுள்ளது என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஹையர் கிரேட் பதவிகளில் இப்போது செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பதவிகளில் செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் பணியாற்றி வருவதால் அவர்களுக்கு செகன்டரி கிரேட் சம்பளம் தரவேண்டுமென்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையில் தான் அவர்களுக்கு அந்தச் சம்பளம் தருவது என்ற முடிவு எடுத்து 11,000 ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2,000-ல் இருந்து 3,000 வரையில் அந்த ஆசிரியர்கள் அதில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஹையர் கிரேட் பயிற்சி, ஹையர் கிரேட் ட்ரெயினிங் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. இனி ஹையர் கிரேட் போஸ்ட்கள் இருக்காது. இப்போது ஹையர் கிரேடில் உள்ள ஆசிரியர்கள், அவர்கள் காலம் முடிகிற வரையில் ஹையர் கிரேடில் இருப்பார்கள்.